# வாய்ப்புற்றுநோய்

இலங்கையில் ஆண்களிடையே உருவாகும் பொதுவான புற்றுநோய்களில் ஒன்றாக இது உள்ளது.

ஆண்களிடையே ஒரு வாரத்திற்கு 7 புதிய புற்று நோயாளிகள் அடையாளம் காணப்படுகிறார்கள்

பெண்களிடையே ஒரு வாரத்திற்கு 2 புதிய புற்று நோயாளிகள் அடையாளம் காணப்படுகிறார்கள்

| ஆபத்துக்காரணிகள் | அறிகுறிகள் |
|---|---|
| புகைத்தல் | எரிச்சல் உணர்வு |
| புகையிலை பாவனை | வாயில் சிவப்பு/வெள்ளை கட்டிகள் காணப்படல் |
| பாக்கு மற்றும் பாக்கு சார்ந்த உற்பத்திப்பொருட்களின் பாவனை | வாயை திறப்பதில் சிரமம் |
| மது அருந்துதல் | 2 கிழமைக்கு மேற்பட்ட ஆறாத வாய்ப்புண் |

**மேற்கூறிய ஏதேனும் அறிகுறிகள் உங்களுக்கு இருந்தால், உடனடியாக புற்றுநோய் ஆரம்பகட்ட கண்டறிதல் மையத்திற்குச் சென்று உங்கள் வாயினைப் பரிசோதித்துக் கொள்ளுங்கள்.**

30% -50% மான புற்றுநோய்கள் தடுக்கப்படக்கூடியவை (உலக சுகாதார ஸ்தாபனம் WHO)

ஏனைய புற்றுநோய்களில் பெரும்பாலானவற்றை ஆரம்பத்திலேயே கண்டறிந்தால் குணப்படுத்த முடியும்.



Mammography machine

**Rotary**

This equipment is donated by the Rotary Club of Colombo in association with Rotary Club of Birmingham, Alabama (USA), Rotary Club of Nurnberg, Sigena (Germany) and Rotary Club of Zurich, Shital (Switzerland), with the support of The Rotary Foundation of Rotary International under Global Grant No GG 1526053



Ultrasound Scan

- 2004 ஆம் ஆண்டில், கொழும்பு ரோட்டரி கழகமானது சுகாதார அமைச்சுடன் இணைந்து, நாரஹேன்பிட்டவில் உள்ள புற்றுநோய் ஆரம்பகட்ட கண்டறிதல் மையத்தினை நிறுவுவதில் முன்னோடியாக செயற்பட்டது.
- அதன் பயனாக 2024 ஆம் ஆண்டளவில், நாரஹேன்பிட்ட புற்றுநோய் ஆரம்பகட்ட கண்டறிதல் மையமானது 20 ஆண்டுகால தொடர்ச்சியான சேவையினை மக்களுக்கு வழங்கிவருகிறது.

சனி, ஞாயிறு மற்றும் அரசு விடுமுறை நாட்கள் தவிர்ந்த வார நாட்களில் காலை 8.30 மணி முதல் மாலை 4.00 மணி வரை சேவை மையம் திறந்திருக்கும்.
முன்பதிவுகள் எதுவும் தேவையில்லை.

cedc.nccp@gmail.com

https://www.nccp.health.gov.lk

புற்றுநோய் ஆரம்பகட்ட கண்டறிதல் மையம்

LOCATION

PRINTED AT THE STATE PRINTING CORPORATION

# புற்றுநோய் ஆரம்பகட்ட கண்டறிதல் மையம் நாரஹேன்பிட்ட



**எங்களுடைய சிகிச்சை நிலையத்திற்கு வாருங்கள்......**

- அறிகுறிகளை ஆரம்பத்திலேயே கண்டறிவதன் மூலம் உங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளலாம்.
- பரிந்துரைகளோ அல்லது முன் பதிவுகளோ தேவையில்லை.
- விரைவான சிகிச்சையினைப் பெறுவதற்கு அணுகக் கூடிய இடமாக இது உள்ளது

புற்றுநோய் ஆரம்பகட்ட கண்டறிதல் மையம்
தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்டம்
சுகாதார அமைச்சு- இலங்கை
No 555/5 , எல்விட்டிகல மாவத்தை
நாரஹேன்பிட்ட
Tel – 0113159227

## உங்களுக்கு இந்த அறிகுறிகள் ஏதும் இருக்கிறதா?

| | | |
|---|---|---|
| கட்டிகள் மற்றும் வீக்கங்கள் | வழமைக்கு மாறான இரத்தப்போக்கு | நிறை குறைவு |
| நீண்டகால வலி | 2 கிழமைக்கு மேலாக மலம் கழிப்பதில் மாற்றம் காணாப்படல் | நீண்டகால இருமல், குரலில் மாற்றம், மூச்சுவிடுவதில் சிரமம் |
| தோலிலுள்ள பிறப்பு அடையாளங்களில் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் தோலில் ஏற்படும் மாற்றங்கள் | மார்பகங்களில் புதிய மாற்றம் ஏதேனும் ஏற்படல் | நீண்டகாலமாக அடிவயிற்றில் ஏற்படும் வலி |

மேலே உள்ள அறிகுறிகளில் ஏதேனும் உங்களுக்கு இருந்தால், புற்றுநோய் ஆரம்பகட்ட கண்டறிதல் மையத்தை நாடுங்கள்.

### எங்கள் குழு

- மருத்துவர்கள்
- பல் அறுவை சிகிச்சை நிபுணர்கள்
- பொது சுகாதார தாதியர்கள்
- தாதியர்கள்
- கதிரியிக்கவியலாளர்
- மருத்துவ ஆய்வுகூட தொழிநுட்பவியலார்கள்
- துணை சுகாதார ஊழியர்கள்

மேமோகிராபி அறிக்கையிடல் ஆனது கதிரியக்கவியல் வைத்திய நிபுணரினால் செய்யப்படுகிறது.

## மார்பகப் புற்றுநோய்

இது உலகலாவிய ரீதியிலும் இலங்கையிலும் ஒரு பொதுவான புற்றுநோயாகக் காணப்படுகிறது.

ஒருநாளில் 15 பெண் மார்பகப் புற்று நோயாளர்கள் இனங்காணப்படுகின்றனர்

ஒருவாரத்தில் 3 ஆண் மார்பகப் புற்று நோயாளர்கள் இனங்காணப்படுகின்றனர்

- மார்பகப் புற்றுநோயானது அதிக வீரியம் மிக்கதாகக் காணப்படுவதுடன் ஆண்களிடையே உயர் இறப்பு வீதத்தையும் ஏற்படுத்தக் கூடியது.
- தாய்ப்பால் ஊட்டுவது மார்பகப்புற்றுநோய்கான ஆபத்தைக் குறைக்கிறது.

| ஆபத்து காரணிகள் | அறிகுறிகள் |
|---|---|
| வயது அதிகரிப்பு | மார்பகத்தின் அளவுகளில் மாற்றம் ஏற்படல் |
| பரம்பரையில் புற்றுநோய் இருத்தல் | மார்பகங்களின் தோல் சிவத்தல் |
| புகைத்தல் மற்றும் மதுபாவனை | தோலில் பள்ளங்கள் ஏற்படல் |
| மாதவிடாய் நிறுத்தத்தின் பின்னரான அதிக உடல் பருமன் | மார்பகம் அல்லது அக்குள்களில் கட்டிகள் |
| ஹோர்மோன்கள் மாற்று சிகிச்சை (HRT) | மார்பகங்களில் ஆறாத புண்கள் காணப்படல் |
| | முலைக்காம்பில் ஏற்படும் மாற்றம் / முலைக்காம்பிலிருந்து இரத்தம் கசிதல் |

- மேற்கூறியவற்றில் ஏதேனும் அறிகுறிகள் உங்களிடம் காணப்பட்டால், உடனடியானாக, புற்றுநோய் ஆரம்பகட்ட கண்டறிதல் மையத்தை நாடுங்கள்….

### எங்களது சேவைகள்

- சுய மார்பக பரிசோதனை குறித்த கல்வியை வழங்குதல்
- மருத்துவ மார்பக பரிசோதனை
- மார்பக கதிரொளி பரிசோதனை (ultra sound scan)
- மேமோகிராபி

## கர்ப்பப்பை கழுத்துப் புற்றுநோய்

- இது கருப்பை கழுத்திலிருந்து உருவாகும் புற்றுநோயாகும்.
- 90% கருப்பை கழுத்துப் புற்றுநோய்கள் மனித பப்பிலோமா வைரஸ் (HPV) தொற்று காரணமாக ஏற்படுகின்றது.

மாதவிடாய் காலங்களுக்கிடைப்பட்ட காலப்பகுதிகளில் ஏற்படும் இரத்தப்போக்கு

உடலுறவின் போது அல்லது அதற்குப் பின்னர் ஏற்படும் வலி மற்றும் இரத்தப்போக்கு

நிரந்தர மாதவிடாய் நிறுத்தத்திற்கு பின்னர் ஏற்படும் இரத்தப்போக்கு

அடிவயிற்று வலி

யோனியிலிருந்து ஏற்படும் துர்நாற்றத்துடன் கூடிய திரவங்களின் வெளியேற்றம்.



- கற்பப்பைக் கழுத்துப் புற்றுநோயானது தடுக்கப்படக்கூடியது, அதே போல் முன்கூட்டியே கண்டறியப்பட்டால் குணப்படுத்தவும் முடியும்.

HPV DNA சோதனை மற்றும் PAP சோதனை மூலம் HPV தொற்றை, கர்ப்பப்பை கழுத்துப் புற்றுநோய்க்கு முந்தைய நிலைகள் மற்றும் கர்ப்பப்பை கழுத்துப் புற்றுநோய்கள் போன்றவற்றை அடையாளம் காண முடியும்.